**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 105/2023 |
| Deposition of Witness for | : | PW-6 |
| Name and Age | : | திரு.தாது (வயது 60) |
| Father / Husband Name | : | தாதன் |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | பிக்கனஅள்ளி |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 24.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A2, A4, A8, A10 Present. A1, A3, A6, A9 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed. A5 died.**

**PW-6**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

எனது பெயர் தாது ஆகும், வழக்கு விசாரணையின் போது தவறுதலாக மாது என அச்சடிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியை விசாரிக்க ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

நான் பிக்கனஅள்ளி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் தெரியவில்லை. சுமார் 30 வருடங்களுக்கு முன்பு பேய்யப்பன் என்பவர் தொட்லான் என்பவரிடமிருந்து பிக்கனஅள்ளி இருந்த நிலத்தை வாங்கி இருப்பதாகவும், பத்திரம் பதிவு செய்ய பாலக்கோடு பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய இருப்பதாகவும் அதில் கையொப்பம் செய்ய என்னை பேய்யப்பன் வரும் படி கூப்பிட்டார். நான் அந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் 03.07.1997 தேதியிட்ட கிரைய ஆவணம் எண்.1401/1997 ஆவணத்தில் இன்னார் என்று நிருபித்தார். 2-வது தாது என்ற கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிகளை தெரியும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.24 19:05:16 +0530

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பேய்யப்பன் மற்றும் தொட்லான் ஆகிய இரு குடும்பத்தாரையும் எனக்கு தெரியும். நானும் அதே ஊரைச்சேர்ந்தவன் தான். தொட்லான் உடன் பிறந்தவர்கள் சின்னப்பிள்ளை மற்றும் சூடி ஆவார்கள். வழக்கு சொத்து தொட்லாவின் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பேய்யப்பனுக்கு பத்திரம் செய்து கொடுக்கும் போது சின்னப்பிள்ளையும், சூடியும் கையொப்பம் செய்து கொடுத்தார்களா என்றால் நினைவில்லை. அவர்கள் அங்கு இருந்தார்கள். கிரையம் சம்மந்தமாக எவ்வளவு தொகை பேசப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. பேய்யப்பனுக்கு தொட்லான் மற்றும் அவர் உடன் பிறந்தவர்களிடமிருந்து 1995–க்கு முன்போ அல்லது பின்போ வேறு நிலங்கள் கிரையம் பெற்றரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணத்தை தவிர புகார்தாரர் குடும்பத்தில் உள்ள நிலங்கள் மற்றும் அதில் உள்ள பிரச்சரனை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.24 19:05:20 +0530

Judicial Magistrate,
Palacode.